**CC.No.223/2021**

**P.W.2**

| | | |
|---|---|---|
| திருமதி. பேச்சியம்மாள் | க/பெ. முத்து கிருஷ்ணன் | Date: 23.06.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**(Accused present)**

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :**

1. நான் சத்தம் கேட்டு என் மச்சான் வீட்டிற்கு சென்றேன். அங்கு மச்சான் மனைவி அ.சா.1 இருந்தார். நான் என்ன பிரச்சனை என்று கேட்டேன். அவர் என்னிடம் பிரச்சனை குறித்து சொன்னார். நான் என் மச்சான் வீட்டிற்கு 11.00 மணியளவில் சென்றேன். என் மச்சான் மனைவி வீட்டை விட்டு வெளியே வரவில்லை என்றால் சரிதான். நான் வீட்டை பார்க்கும் போது பேன் உடைந்து இருந்தது. போலீஸ் விசாரிக்கும் போது பேன் உடைந்த விவரத்தை சொன்னேன். போலீஸ் அன்று இரவு வரவில்லை. காலை எத்தனை மணிக்கு வந்தார் என்றால் தெரியாது.

2. மறுநாள் இசக்கியம்மாளுடன் நான் காவல் நிலையம் செல்லவில்லை. போலீஸ் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் ஞாபகமில்லை. சம்பவதன்று சம்பவம் சுமார் 1/2 மணி நேரம் நடந்திருக்கும். சத்தம் கேட்டு நிறைய கூட்டம் கூடினார்கள் என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிக்கும் பல வருடங்களுக்கு முன்பாகவே பேச்சு வார்த்தை கிடையாது. எங்கள் இரண்டு குடும்பங்களுக்கும் இடையே சிவில் வழக்கு நடந்து வருகிறது என்றால் சரிதான். சாட்சி வெங்கடேஷ் எனக்கு என்ன உறவு முறை என்றால் என் கணவருக்கு மச்சான் முறை ஆகும்.

3. சாட்சி வெங்கடேஷ் சம்பவ இடத்திற்கு சத்தம் கேட்டு வந்து விட்டார். சாட்சி வெங்கடேஷ்க்கும் எதிரிக்கும் பேச்சு வார்த்தை கிடையாது என்றால் எனக்கு தெரியாது. சாட்சி வெங்கடேஷ்க்கும் அவரது மனைவிக்கும் இடையே இந்நீதிமன்றத்தில் குடும்ப பிரச்சனை சம்பந்தமாக வழக்கு நடந்து வருவது

தெரியும். அவரது மனைவி எதிரிக்கு உறவினர் என்றால் தெரியாது. சத்தம் கேட்டு நான் பின் வாசல் வழியாக தான் வந்தேன். பின் வாசல் கதவு சம்பவதன்று மூடி தான் இருந்தது. என் வீட்டு பின் வாசல் கதவு மூடி இருந்தால் வெளியே நடப்பது தெரியாது என்றால் சரிதான். ராஜ்குமார் எத்தனை மணிக்கு வந்தார் என்றால் சண்டை முடிந்த பின் வந்தார். சொத்து பிரச்சனை காரணமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

Judicial Magistrate,
Valliyoor.